செ. கு. எண்: 018 நாள் : 14.04.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு ஓ.பன்னீர்செல்வம்**

அவர்களின் அறிக்கை – **14.4.2015**

**1)** கோயம்புத்தூர் மாவட்டம், **ஆழியாறு அணையிலிருந்து** பொள்ளாச்சிக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், சேத்துமடைக் கால்வாய் மற்றும் ஆழியாறு ஊட்டுக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு அணையிலிருந்து பொள்ளாச்சிக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், சேத்துமடைக் கால்வாய் மற்றும் ஆழியாறு ஊட்டுக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு **15.4.2015** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள **22,332 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்;

2) திருநெல்வேலி மாவட்டம், **பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு** அணைகளிலிருந்து தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அணைக்கட்டின் கீழுள்ள தெற்கு பிரதான கால்வாய் மற்றும் வடக்கு பிரதான கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் பாசனம் பெறும் நிலங்களின் சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அணைக்கட்டின் கீழுள்ள தெற்கு பிரதான கால்வாய் மற்றும் வடக்கு பிரதான கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் பாசனம் பெறும் நிலங்களின் சாகுபடிக்கு **15.4.2015** முதல் தண்ணீர் திறந்து விட ஆணையிடப்படுகிறது. இதனால், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள **8,124 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**